# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்குமாகாணம்
# மாதிரிப்பரீட்சை - 2020

நாடகமும் அரங்கியலும் I | 58-T-I | நேரம் - 3 மணித்தியாலம்

## பகுதி I

**அறிவுறுத்தல்கள்**

*எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக

*இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவுசெய்க.

1. “கதை தழுவிவரும் கூத்தே” நாடகம் எனக் குறிப்பிட்டவர்?
   1. பரதர் 2. இளம்பூரணார் 3. தனஞ்சயர்
   4. அடியார்க்குநல்லார் 5. தொல்காப்பியர்

2. பின்வருவனவற்றுள் குழைமக் கலையாக அமைபவை?
   1. சித்திரம், ஓவியம் 2. ஓவியம், பாடல் 3. சிற்பம், மட்பாண்டம்
   4. நடனம், நாடகம் 5. இசை, மட்பாண்டம்

3. பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலை தொடர்பான தவறான கூற்று?
   1. பார்ப்போரை அடிப்படையாகக் கொண்டு ஆற்றுகை இடம் பெறும்.
   2. ஆற்றுவோர், ஆற்றுகை, பார்ப்போர் என்ற மூன்று விடயங்கள் முக்கியமாகின்றன.
   3. பார்ப்போரின் துலங்கல்கள் பிரதானமானவை.
   4. ஆற்றுவோர் இன்றியும் ஆற்றுகை மேற்கொள்ள முடியும்.
   5. தாக்க மறுதாக்கமுடையவை.

4. பார்ப்பேர் சில வேளைகளில் தங்களுக்கு பிடித்தமான பகுதிகளை திரும்பவும் செய்யுமாறு (Once more) கேட்கும் அரங்க ஆற்றுகை எது?
   1. பலே 2. ஒபேரா 3. கூத்து
   4. இசைநாடகம் 5. கொமடியர்டெல்ஆர்த்தே

5. மலையகத்தில் மாசி மாதம் அமாவாசை கழிந்து வரும் மூன்றாம் நாள் நிகழ்த்தப்படுவது?
   1. பொன்னர் சங்கர் கூத்து 2. காமன் கூத்து 3. அருச்சுனன் தபசு
   4. வீரபத்திரர் ஆட்டம் 5. காடேறித்திருவிழா

6. “மாலதி மாதவம்” என்ற நாடகத்தினை எழுதிய வடமொழி நாடக ஆசிரியர்?
   1. பாசர் 2. காளிதாசர் 3. சூத்திரகர்
   4. ஸ்ரீஹர்சர் 5. பவபூதி

7. கிரேக்கத்ததில் நடிகரை எவ்வாறு அழைத்தனர்?
   1. ஆர்கன் 2. கொறிக்கேஸ் 3. ஹிப்போகிரட்டீஸ்
   4. எக்ஸகோன் 5. ஸ்ரெஸிமொன்

8. கிரேக்க அரங்கின் பிரதான நடிப்பிடம் எவ்வடிவத்தில் அமைந்து காணப்பட்டது.
    1. அரைவட்ட வடிவிலான ஆடுகளம்.
    2. வட்ட வடிவிலான ஆடுகளம்.
    3. புரசீனியம் அமைப்பை ஒத்த நீள் சதுர மேடை.
    4. சதுர வடிவிலான மேடை.
    5. முக்கோண வடிவிலான சிறிய மேடை.

9. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகத்தொகுதியில் அடங்கும் நாடகங்கள் எவை?
    1. உடையார் மிடுக்கு, கண்ணன் கூத்து, நாட்டவன் நகரவாழ்க்கை, போருளோ பொருள்
    2. உடையார் மிடுக்கு, கண்ணன் கூத்து, தவறான எண்ணம், முருகன் திருகுதாளம்
    3. உடையார் மிடுக்கு, பொருளோ பொருள், கண்ணன் கூத்து, முருகன் திருகுதாளம்
    4. உடையார் மிடுக்கு, பொருளோ பொருள், தவறான எண்ணம், முருகன் திருகுதாளம்
    5. உடையார் மிடுக்கு, கண்ணன் கூத்து, நாட்டவன் நகரவாழ்க்கை, முருகன் திருகுதாளம்

10. ஐரோப்பிய நாடக வரலாற்றின் மிகப் பழமையான நாடக எழுத்துருவாக கொள்ளப்படுவது?
    1. த பேர்சியன் 2. புரமீதியஸ் பௌண்ட் 3. அகமெம்னன்
    4. தசப்ளையன்ற் வுமன் 5. த சோபெறி

11. பாரம்பரிய கூத்துக்களில் கட்டியகாரன் பணிகளாக அமையாதது?
    1. சபையோரை ஆயத்தம் செய்தல்.
    2. பாத்திர அறிமுகம் செய்தல்.
    3. நகைச்சுவையை உண்டாக்குதல்.
    4. எடுத்துச் சொல்லியாகச் செயற்படல்.
    5. கதைச் சுருக்கத்தை எடுத்துக் கூறல்.

12. கியோஜின் எனும் நகைச்சுவை இடையீடு வரும் அரங்கு?
    1. கபுக்கி 2. புன்றகு 3. கோவாகா 4. நோ 5. ஒபேரா

13. மனோரதி / கற்பித நாடகங்கள் பற்றிய தவறான கருத்து எது?
    1. வாழ்வை இலட்சிய நோக்கில் பார்க்கும் தன்மை கொண்டவை.
    2. கவர்ச்சிகரமான உரையாடல்களுக்கு முதன்மையளிக்கப்படும்.
    3. 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோற்றம் பெற்றன.
    4. 19ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி வரை செல்வாக்குச் செலுத்தி நின்றன.
    5. வீரத்தையும் தியாகத்தையும் உணர்வெழுச்சி நிரம்பிய நிலைமைக்கு உட்படுத்தியது.

14. வடமொழி நாடகத்தின் ஆரம்பத்தில் இடம் பெறும் ‘‘பூர்வரங்க’’ விதிகளில் வீணை முதலான கருவிகளின் பொருளற்ற ஒலியைக் கிளப்புதல் எவ்வாறு அழைக்கப்படும்?
    1. வக்த்ரபாணி 2. பரிகட்டானா 3. ஸம்கோடனா
    4. மார்க்காஸாரிதம் 5. ரங்கத்வாரம்

15. ‘‘சடங்கு என்பது கூட ஒரு நடைமுறைதான் ஆனால் அது உழைப்புப் போக்கில் இருந்து வேறுபட்டது’’ எனக் கூறியவர்.
    1. பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சன் 2. பக்தவத்சலபாரதி 3. பரதமுனிவர்
    4. பேராசிரியர் சி. மௌனகுரு 5. பேராசிரியர் கா. சிவத்தம்பி

16. சமூகம் சார்ந்த அரங்கியல் சார்ந்த பண்பாட்டு நிலைசார்ந்த ஒடுக்கப்பட்ட உணர்வுகளை மனம் திறந்து வெளிப்படுத்துவதற்கான ஒரு சாதனமாக அரங்கைக் கட்டமைப்பதற்காக சடங்காற்றுகை முறைகளை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்ட ஈழத்தின் அரங்கவியலாளர்
    1. பேராசிரியர் கா. சிவத்தம்பி
    2. கலாநிதி க. சிதம்பரநாதன்
    3. பேராசிரியர் சி. மௌனகுரு
    4. கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்
    5. க. பாலேந்திரா

17. தமிழக நாடக வரலாற்றிலே காலத்திற்கு காலம் ஆடல்களை நிகழ்த்துவோரைச் சிறப்புப் பெயர் கொண்டு அழைத்து வந்தனர் அந்தவகையில் ''திருவளவன்'' எனும் சிறப்பு பெயர் கொண்டு நடனமாடிய ஆண்கள் எக்காலத்தில் அழைக்கப்பட்டனர்?
    1. சங்க காலத்தில்
    2. கலித்தொகை காலத்தில்
    3. பல்லவர் காலத்தில்
    4. சோழர் காலத்தில்
    5. விஜய நகர நாயக்க மன்னர் காலத்தில்

18. ''பசியால் உடல் மெலிந்தேன்'' என்ற இசை நாடகப் பாடலுடன் தொடர்புடைய பாத்திரங்கள்.
    1. நம்பிராஜன், குட்டி அண்ணா
    2. வேடன், நாரதர்
    3. விருத்தன், வள்ளி
    4. வேடன், வள்ளி
    5. நாரதர், வள்ளி

19. ஈடிப்பஸ் மன்னன் நாடகமானது எழுதப்பட்ட ஆண்டாக கருதக்கூடியது.
    1. கி.மு 420 – கி.மு 419
    2. கி.மு 429 – கி.மு 419
    3. கி.மு 429 – கி.பி 420
    4. கி.மு 429 – கி.மு 420
    5. கி.மு 420 – கி.பி 419

20. நடிகர் தமது உள்ளார்ந்த உணர்ச்சிகள் ஊடாகப் பாத்திரங்களில் நுழைய முடியும் எனக் கூறியவர்?
    1. சேக்ஸ்பியர்
    2. அன்ரனி ஆர்த்தே
    3. மோலியர்
    4. பேரோல் பிரட்ஜ்
    5. ஸ்ரனிஸ்லவ்ஸ்கி

21. குறியீட்டு ஒளியமைப்பினை அரங்கிற்கு அறிமுகஞ் செய்தவர்.
    1. ஆன்ரோ அன்ரோயின்
    2. டேவிட் பொலஸ்கோ
    3. ஹென்றி பெக்
    4. அடொல் அப்பியா
    5. யூஜினேபாபா

22. தமிழக நாடகப் பண்பாட்டில் அடிநிலைச் சமூகத்தை முதன்மைப்படுத்தல், சாதிமுறையினை வலுவிழக்கச் செய்தல், இறைபக்தியினை வெளிப்படுத்தல் போன்ற அரங்கியல் பின்புலங்களைக் கொண்ட காலப்பகுதியாகக் கொள்ளத்தக்கது.
    1. சங்க காலம்
    2. நிலப்பிரபுத்துவக் காலம்
    3. விஜயநகர நாயக்கர் காலம்
    4. கோயில் பண்பாட்டுக் காலம்
    5. சிலப்பதிகார காலம்

23. நாடகமொன்று தணிக்கை செய்யப்படுவதன் காரணம்.
    1. ரசனை குறைவாக இருத்தல்.
    2. தெளிவான சித்திரிப்பு முறை இல்லாமை.
    3. தேவைக் கதிகமாக நீண்டிருத்தல்.
    4. மத இன மோதுகைக்கு இடமளித்தல்.
    5. தனிமனிதப் பிரச்சினைகளை வெளிப்படுத்துதல்.

24. செற்சுவானின் நல்ல பெண்மணி (Good women of setsuwan) என்ற நாடகத்தின் ஆசிரியர்?

1. பேட் டோல்ட் பிறெக்ட்
2. அன்ரன் செக்கோவ்
3. சாமுவேல் பேக்கட்
4. அன்ரோ அன்ரோயின்
5. ஹென்றிக் இப்சன்

25. இலங்கைப் பல்கழைக் கழக நாடக வளர்ச்சியில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடக முயற்சிகளை பின்னாளில் பலர் முன்னெடுத்துச் சென்றனர். அதனுள் ''குடித்தனம்'', இரட்டை வேஷம், ''மானிடம் என்பது புல்லோ'', ''குரங்குகள்'' ஆகிய நாடகங்களை எழுதியோர் முறையே.

1. சொக்கன், அ. முத்துலிங்கம், நந்தி, சி. தில்லைநாதன்
2. சி. தில்லைநாதன், சொக்கன், நந்தி, அ. முத்துலிங்கம்
3. அ. முத்துலிங்கம், சொக்கன், சி. தில்லைநாதன், நந்தி
4. நந்தி, அ. முத்துலிங்கம், சி. தில்லைநாதன், சொக்கன்
5. சி. தில்லைநாதன், சொக்கன், அ. முத்துலிங்கம், நந்தி

26. ''ஊராயக்கம, பொருயக்கம, நயாயக்கமா'' போன்ற நாடகம் சார்ந்த சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய சிங்களச் சடங்கு எது?

1. தொவில்
2. சன்னியக்கும
3. பகன்மடுவ
4. கொஹெம்பகங்காரிய
5. ரட்டயக்கும

27. நூர்த்தி நாடக மரபின் முன்னோடியாகக் கருதப்படுபவர் யார்?

1. ஜோன் டீ சில்வா
2. பீற்றர் டீசில்வா
3. தொன் பஸ்ரியன்
4. எம். டி. பெரோரா
5. ஸ்பீபன்

28. யப்பானிய நடிப்பு முறையில் அரகோட்டா (ARAGOTO) எனப்படுவது.

1. தீவிரத் தன்மை கொண்ட மோடி.
2. பெருங்காட்சி, மோடிமைப் படுத்தப்பட்ட மோடி.
3. தாக்கமான வகை மாதிரியான மோடி.
4. குறியீட்டுப் பாங்கு, ஊமம், நடனம் ஆகியவற்றை கொண்ட மோடி.
5. கற்பனைப் பயணமாக அமைவது.

29. ''நாடக இயல்'' எனும் இலக்க நூலின் ஆசிரியர்?

1. கோவிந்த சாமிராவ்
2. வி. கே. சூரியநாராயண சாஸ்திரியார்
3. கோமல் சுவாமிநாதன்
4. இராமானுஜம்
5. பாதல் சர்க்கார்

30. எலிசபெத் காலத்திலே முதன் முதலாக பிளாங்வேஸ் (Blank Vers) எனும் கவிதை மொழியினை தனது நாடகங்களில் பயன்படுத்தியவர்

1. தோமஸ் கிற்
2. கிஸ்தோபர் மாளோ
3. ஜோன் லிலி
4. பென் ஜோன்சன்
5. வில்லியம் சேக்ஸ்பியர்

31. பேராசிரியர் மௌனகுருவினால் 2000 மற்றும் 2003 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட இராவனேசன் நாடகத்தின் ஆற்றுகைக்குப் பின்புலமாய் அமைந்த முக்கிய காரணிகளில் ஒன்று

1. வீரம் மிக்க தமிழ் மன்னனாக இராவணன் சித்திரிக்கப்பட்டமை.
2. தமிழரசுக் கட்சியின் தோற்றம்.
3. சிறுபான்மை தமிழர்கள் ஒடுக்கப்பட்டமை.

4. தமிழீழ விடுதலைப் போராட்டம்.
5. யுத்தத்தின் பின்னரான மக்களின் மனநிலை.

32. விக்டோரிய சமூகத்தைச் சார்ந்த ''லவுரா கியலெஸ்'' என்ற பெண்மணியின் குடும்பக் கதையினை அடிப்படையாகக் கொண்டு 1871ம் ஆண்டு எழுதப்பட்ட யதார்த்த நாடகம்.

1. சமூகத்தின் தூண்கள் 2. துணிவுள்ள தாய் 3. பேய்கள்
4. ஒரு பாவை வீடு 5. இளைஞர் சங்கம்

33. கோடை நாடகத்தில் நாட்டுப்பற்று சுதேசியம் பற்றிய ஒத்த மனநிலைகளை உடைய பாத்திரங்களை மாத்திரம் கொண்ட தொகுதி.

1. மாணிக்கம், பஞ்சையர், சோமு, காசி
2. மாணிக்கம், பஞ்சையர், முருகப்பு, கணேசு
3. மாணிக்கம், செல்லம், சோமு, கணேசு
4. மாணிக்கம், பஞ்சையர், முருகப்பு, காசி
5. மாணிக்கம், செல்லம், விதானை, காசி

34. ''பியர் காடின்'' பிள்ளைகள் என நடிகர்களை அமைக்கும் நாடகமரபு.

1. ஜப்பானிய நோ 2. ஜப்பானிய கபுக்கி 3. சீன ஒபேரா
4. ஜப்பானிய கோவாகா 5. ஜப்பானிய புன்ரகு

35. மத்தியகால நாடகங்களில் றொபின் கூட் பிளே (Robin Hood Pray) என்பது.

1. பரிகசிப்பு நாடகம் 2. கிராமிய நாடகம் 3. வீர நாடகம்
4. பாணர் இசை நிகழ்வு 5. ஒழுக்கப்பண்பு இடை நிகழ்வு நாடகம்

36. வில்லியம் சேக்ஸபியரால் எழுதப்பட்டு முதன்முதலாக வெளிவந்த நாடகம்.


1. கிங்கிலியர் 2. ஒதல்லோ 3. IV ம் ஹென்றி
4. VI ம் ஹென்றி 5. VI ம் றிச்சட்

37. அருகில் உள்ள படம் குறிக்கும் நாடகம்.



1. கிங்கியர்
2. ஒதல்லோ
3. ஒரு பாவை வீடு
4. அபிக்ஞான சாகுந்தலம்
5. ஈடிப்பஸ் மன்னன்

38. அருகில் உள்ள படம் குறிக்கும் நாடகவியலாளர்.



1. பிரான்சிஸ் ஜெனம்
2. எஸ். ரி. அரசு
3. ஏ.ரகுநாதன்
4. தாசீசியஸ்
5. சுந்தரலிங்கம்

39. படம் குறிக்கும் ஆற்றுகை.



1. கோலம்
2. சொக்கரி
3. நாடகம
4. தொவில்
5. தகட்டசன்னிய

40. படம் குறித்து நிற்கும் கூத்து



1.மகிடிக் கூத்து
2.அருச்சுணன் தபசு
3.பறைமேளக் கூத்து
4.நாட்டை
5.பொன்னர் சங்கர்

## பகுதி II

**அறிவுறுத்தல்**

பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களுக்குக் குறையாமலும் பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களுக்கு குறையாமலும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

**1.**

1. கலை, கைவினை என்பனவற்றை குறிப்பிட்டு அவை இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகளைப் பட்டியல் படுத்துக.
2. பாரம்பரிய, மற்றும் நவீன அரங்குகளின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்தி நிற்கும் சமூக பண்பாட்டு அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
3. தற்கால நவீன அரங்குகளில் பாரம்பரிய அரங்குகளின் தாக்கத்தினை மதிப்பீடு செய்க.

(3 X 5 = 15 புள்ளிகள்)

**2.**

1. இயற் பண்பு, யதார்த்த அரங்க மரபுகளின் தோற்றத்திற்கு பின்புலமாய் அமைந்த காரணிகளை முன்வைக்குக.
2. அரங்கு பற்றி ஸ்ரனிஸ்சிலவஸ்கி முன்வைத்த கோட்பாட்டை எடுத்துக் கூறி விளக்குக.
3. யதார்த்த விரோத அரங்கொன்றில் நீர் நடிப்பதற்காகப் பெற்றுக் கொண்ட பயிற்சி முறைகளை எடுத்துக் கூறி விளக்குக.

(3 X 5 = 15 புள்ளிகள்)

**3.** சமஸ்கிருத அரங்கு, ஜப்பானிய நோ அரங்கு என்பவற்றிலே

1. அரங்கவெளி
2. ஆற்றுகைமுறை
3. பார்வையாளர் துலங்கல் என்பன அமையுமாற்றை விபரிக்குக.

(3 X 5 = 15 புள்ளிகள்)

## பகுதி B

**4.** விமர்சனம் என்பது நாடக மொன்றின் வெற்றி தோல்வியினைத் தீர்மானிக்கின்றது. அந்த வகையில் ஆக்க பூர்வமான விமர்சனமொன்றில் உள்ளடங்க வேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டு அதனை விளக்குக.

(15 புள்ளிகள்)

**5.**சிங்கள நாடக உலகில் தமக்குரிய தனித்துவமான கலை வடிவமொன்றை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டவராக எதிர்வீர சரச்சந்திர விளங்குகின்றார். அவ்வாறு அவர் மேற்கொண்ட முயற்சிகளை மதிப்பீடு செய்க.

(15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. கபுக்கி
2. கூத்து
3. சடங்கு
4. கேலம்
5. நவவேட்கைவாதம்

(3 X 5 = 15 புள்ளிகள்)